| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தண்.வசுந்தராதேவி,<br>எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள்,<br>இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி. |

**ந.க.எண். 000080/எப்1/2019** **நாள் : 21.02.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் 2019 – தேர்வு மையங்களுக்கான பெயர் பட்டியல், வருகைத்தாள், அறைத்திட்டம் – பதிவிறக்கம் செய்திட தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் தலைமையாசிரியர்களை அறிவுறுத்தக் கோருதல் – தொடர்பாக.

-----

தங்கள் மாவட்டத்திலுள்ள மேல்நிலைத் தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்களை, தங்கள் மையத்திற்குரிய மார்ச் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் தொடர்பான கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களை, **25.02.2019 பிற்பகல் முதல் 02.03.2019 வரையிலான நாட்களில்** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று, தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password -ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களையும் கேட்டுக் கொள்கிறேன். **எக்காரணங்கொண்டும் பதிவிறக்கம் செய்வதற்கான நாட்கள் நீட்டிக்கப்படமாட்டாது** என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. **Centre wise Nominal Roll**
2. **Hall Seating Plan**
3. **Attendance Sheet**
4. **List of Register Numbers to be pasted on the answer script cover**
5. **C.S.D. Forms**

மேலும், Seating Plan–ன்படி, முதலில் புதிய பாடத்திட்டத்தில் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் பள்ளி மாணாக்கர் (Regular) பதிவெண்களும், அதன் பின்னர் கடைசியில் ஏற்கனவே +1 தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களில் (Arrear) தேர்வு எழுதும் (பழைய பாடத்திட்டம்) மாணாக்கரின் பதிவெண்களும் இடம் பெற்றிருக்கும். தேர்வு மையத்தில் அறைக் கண்காணிப்பாளர்களுக்கும், தேர்வர்களுக்கும் புதிய / பழைய பாடத்திட்ட வினாத்தாட்களை வழங்கும் பொழுது மிகுந்த கவனத்துடன் வழங்க வேண்டும்.

அதேபோன்று, தேர்வு முடிந்த பின் விடைத்தாள் கட்டுக்களை கட்டும்பொழுது, புதிய பாடத்திட்டத்தில் தேர்வெழுதிய மாணாக்கரின் விடைத்தாட்களை தனியாகவும், பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதிய மாணாக்கரின் விடைத்தாட்களை தனியாகவும் கட்டுக்களாக கட்டி வழித்தட அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

அனைத்து தேர்வு மையங்களிலும் புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தில் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் மாணாக்கர்கள் இருப்பார்கள் என்பதால், தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி எவ்வித குறைபாடும் இன்றி மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை நடத்துவதற்கு முதன்மைக் கல்வி அலுவலர்கள் உரிய அறிவுரைகளை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–

**இயக்குநர்**

__நகல்:__

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.